# அன்பன் - அறிஞன் - பண்பாளன்

**திரு. வே. கணபதிப்பிள்ளை**
அதிபர்
கமு/அக்கரைப்பற்று இராமகிருஷ்ண மிஷன்
மகா வித்தியாலயம்.

**அ**ப்போது இரண்டாம் உலக மகா யுத்தம் நடந்து கொண்டிருந்தது. உலகச் சந்தையிற் பொருள்களின் விலைகள் பன்மடங்கு கூடியதாலும், உணவு உற்பத்திக்கு வேண்டிய சக்திகள் யுத்த ஆயுதங்களின் உற்பத்திக்குத் திருப்பி விடப்பட்டதன் விளைவாக உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டமையாலும், மக்கள் சொல்லொண்ணுத் துயரினை அனுபவித்துக் கொண்டிருந்தனர். ஒருவருக்குப் போதுமான உணவை ஒன்பது பேர் பகிர்ந்து உண்ண வேண்டிய நிலைமை நாடெங்கிலும் காணப்பட்டது. அரசாங்கம், எவ்வளவோ சிரமத்துடன் பெறும் குறைந்த அளவுத் தானியங்களையும் ஏனைய உணவுப் பொருள்களையும் விலைக்கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ்க் கொணர்ந்து, பங்கீட்டு முறையினைத் தீவிரமாக அமுல் செய்து கொண்டிருந்தது.

மட்டக்களப்பு உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியின் அலுவலகம் கச்சேரிக் கட்டிட மேல் மாடியின் தென் மேற்குப்புற மூலையில் அமைந்திருந்தது. அவ்வறையின் முன்னுல், பித்தளைப் பொத்தான்கள் பட்டி முதலியவற்றுடன் கூடிய ''காக்கிச்'' சீருடை அணிந்த சிற்றூழியர் ஒருவர் கடமை புரிந்தார். அவருக்கு முன்னுல் நீண்டதொரு ''கியூ'' வரிசை; வரிசையில் நிற்போருடைய கரங்களில் பல விதமான விண்ணப்பப் படிவங்கள்: சிலர் திருமண வைபவத்துக்குச் சீனி, மிளகாய் வாங்குவதற்கான உத்தரவுப் பத்திரம் வேண்டி நிற்பர்; இன்னுஞ் சிலர் சாவீட்டு முப்பதாம் நாட்கிரியைக்கான உணவுப் பொருள்கள் வாங்குவதற்கும், மேலும் சிலர் ஆலயத்தில் நடைபெறும் திருவிழா நைவேத்தியத்துக்கான உணவுப் பொருள்கள் வாங்குவதற்கும்........... இப்படிப் பல் வேறு விதமான விண்ணப்பங்களுடன் மக்கள் ''கியூ'' வில் நின்றனர். கச்சேரியின் மற்றைய அலுவலகங்கள் எவ்வித சந்தடியுமின்றி வெறிச்சோடிக் கிடக்கையில் இந்த உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியின் அலுவலகத்துக்கு முன்னுல் மட்டும் எப்போதும் மக்கள் கூட்டம் குறைவின்றிக் காணப்பட்டது. சரியாக 8-30 மணிக்குத் தூய வெள்ளை நிற ஆடை தரித்த உத்தியோகத்தர் ஒருவர் உட்பிரவேசிப்பார். மக்களும் ஒருவர் பின் ஒருவராக ''நந்தி பகவானைத்'' தாண்டி உட்பிரவேசிப்பர், விண்ணப்பங்களை நன்கு படித்து விட்டு

ஒரேயொரு முறை தலையை நிமிர்த்திப் பார்ப்பார் அவ்வுத்தியோகத்தர். உடனே விண்ணப்பப் பத்திரத்தில் ''5 றுத்தல் சீனி'' என்றோ அல்லது ''1 இறுத்தல் செத்தல் மிளகாய்'' என்றோ குறிப்பெழுதி, அதனடியில் ''ரீ. மயில்'' என்று ஆங்கிலத்தில் ஒப்பமிட்டு அனுப்பி வைப்பார். ஆம், அவர் தான் கடமையில் தவறாத கனவான் திரு தருமலிங்கம் மயில்வாகனம். யுத்தகாலத்தில் சுயநலமிகள் பல்வேறு பிழையான வழிகளில் 'எரிகிற வீட்டில் பிடுங்கியது இலாபம்' என்ற தோரணையில் பணத்தைச் சம்பாதித்துக் குவித்துக் கொண்டிருக்கையில், இந்த ஏழை பங்காளன், தமக்குக் கிடைத்த பெரும் பதவியினை முதலீடாக வைத்துப் பொருளீட்டிக் குபேர வாழ்வு வாழ விழையாமல், மக்களுக்குத் தொண்டாற்றி, அவர்களுடைய பேரன்பெனும் பெருநிதியைப் பெருமளவிற் சேர்த்துக் கொண்டிருந்தார். அன்று அவர் உழைத்துச் சேர்த்த சொத்து, நிதானந் தவறாத நேர்மை ஒன்றேயாகும். அதனால் அவர் மக்கள் மனத்திலே அழியாத ஓரிடத்தைப் பெற்றுக் கொண்டார். மட்டக்களப்பு மக்கள், அவருடைய கடைசி மூச்சு வரையில் அவரை நன்றியுணர்வுடன் 'ஏ. எப். சீ. மயில் வாகனம் ஐயா' என்றே அழைத்து வந்தனர். ஏழை மக்களுக்கு அவர் என்றும் அன்பனாகவே வாழ்ந்து வந்தார். அவர்களுடைய அன்றாடப் பிரச்சினைகளை அன்புடன் வினவி, அனுதாபத்துடன் ஆய்ந்து, ஆவன செய்து கொண்டிருந்தார். 'உயர்ந்த கொள்கை எளிய வாழ்வு' என்னும் தத்துவத்தின் விளக்கமாயமைந்தது அவர் வாழ்க்கை. அவ்வாழ்க்கையில் கொண்ட நாட்டமே அவரைத் தங்களுடைய அரசியல் தலைவனாகவும் விளங்கவைக்க வேண்டும் என்னும் அபிலாஷையை நியாய புத்தி படைத்த மக்கள் மனங்களில் ஏற்படுத்திற்று. வரலாறு, பொருளியல் என்பவற்றில் சிறப்புப் பட்டம் B. A. Hons. (Lond.) – பெற்று விளங்கிய அந்தச் சட்ட வல்லுநரின் அரசியற் சேவையைப் பெற்று உயர்வதற்கு மட்டக்களப்புக் கொடுத்து வைக்கவில்லை; அவ்வளவுதான்.

அவர், தான் ஒரு அறிஞன் என்றோ, பெரிய சட்ட மேதை என்றோ மற்றோரிடம் என்றுவது காட்டிக் கொண்டதில்லை. 'என்னிடம் நறுமணம் கிடையாது' என்று சொல்லிக் கொண்டாலும் மல்லிகை மலரின் நறுமணம் அதை விட்டுப் போய் விடுமா என்ன? அவருடைய வார்த்தைகளில், அகந்தை வாய்ப்படாத அறிவின் தெளிவு பரிமளித்தது. அந்தத் தெளிவுதான், கற்றோர் – கல்லாதோர்; ஏழை – செல்வன் என்ற எவ்வித பேதமுமின்றி அவரை அணுகிய அனைவரையும் வசீகரித்துப் பற்றிக் கொள்ளும் ஒரு தளையாயமைந்தது. அவருடைய தூய உள்ளத்திலிருந்து வந்த சொற்கள் மற்றோரையும் தூய்மைப் படுத்தி நன்னெறிப் படுத்தும் சக்தி வாய்ந்தனவாய் அமைந்தன.

''அறிவுடைய ரெல்லா முடையார், அறிவிலார்
என்னுடைய ரேனு மிலர்''

என்னும் குறளடிகளுக்கிணங்க அவரிடமிருந்த தெளிந்த நல்லறிவு அவரை எல்லா முடையவர் ஆக்கியது. அவருடைய சட்ட மேதாவிலாசம், இரு கட்சிக்காரருக் கிடையிலுள்ள பூசலைப் பெரிது படுத்திப்

பணஞ் சம்பாதிக்கும் நெறியில் அவரைச் செலுத்திய தொன்றல்ல. அதற்கு மாருகக், கட்சிக் காரனிடம் 'உன் பக்கம் நியாயமில்லை; மறு பக்கத்திலேயே நியாயமிருக்கிறது; ஆகையால் நீ விட்டுக் கொடுத்து விடு; அதனுல் நீ அவனுடைய நட்பை மீண்டும் பெறுவதோடு நியாயம் தேடிச் செல்லும் முயற்சிகளில் உனது பணத்தைச் செலவு செய்வதிலிருந்தும் தப்பிக் கொள்ளலாம்' என்றவாறு உண்மையைத் தெளிவாகத் துணிந்து கூறிக் கட்சிக்காரனை நல்வழிப்படுத்துவதே திரு. மயில்வாகனம் அவர்கள் பெற்றிருந்த அறிவாகும். அவருடைய மறைவு குறித்து, நியாயஸ்தல நீதிபதிகளும், வழக்கறிஞர்களும் மனத்துயருடன் ஆற்றியுள்ள அனுதாபப் பேச்சுக்களே இதற்குத் தகுந்த சான்ருகும்.

அவர் ஒரு வறட்டுக் கொள்கையாளன் அல்லர்; சொன்னதை நடை முறைப் படுத்திக் காட்டிய கர்மவீரன். எத்தனையோ பேர் விவசாயத்தை வெறும் வாய்ச் சொற்களால் வளர்த்துக் கொண்டிருக்கையில் அவர் தீவிரமான ஒரு விவசாயியாக விளங்கினுர். உன்னிச்சைக் கண்ட விவசாய அபிவிருத்தியில், அவர் விவசாயிகளின் ஒரு பெருந் தலைவனுகவும், தோழனுகவும் விளங்கினுர். விவசாயத்துடன் நேரடித் தொடர்புடைய சங்கங்களிலும், தாபனங்களிலும் தலைமைப் பதவிகள் வகுத்து விவசாயிகளின் நலனுக்காக அல்லும் பகலுமுழைத்தார். அவருடைய அப்பழுக்கற்ற நேர்மை, அவர் பதவி வகுத்த தாபனங்களின் நற்பெயருக்கு அணி செய்தது.

ஓய்வு நேரமென்பது அவருக்கு என்று மிருந்ததில்லை. வீட்டில், மாலை வேளைகளில், மாங்கன்று ஒட்டுவது முதல் கரும்பு காய்கறி உண்டாக்குவது வரையில் எப்போ பார்த்தாலும் ஒய்வொழிவின்றிச் செயற் பட்டுக் கொண்டேயிருப்பார். தமது வீட்டுத் தோட்டத்தில் உற்பத்தியாகும் மரக்கறி வகைகளைத் தெருவாற் செல்லும் நண்பர்களை அழைத்துக் காட்டி, மகிழ்ந்து, அவர்களுக்கும் பங்கு கொடுத்து அனுப்புவரர்.

''பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல், நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாம் தலை''

என்னும் பொதுமறை யடிகளுக்கேற்ப, மற்றவர்களையும் ஓம்பி வாழ்ந்த பண்பு தழுவிய பெருவாழ்வு அவருடையதாகும்.

அந்த அன்பன் – அறிஞன் – பண்பாளன் இன்று நம்மிடையே யில்லை. எல்லோருக்கும் அன்பும், அறிவும், பண்பும் காட்டிப் போஷித்து வந்த ஒரு பெரு மனிதன் சாய்ந்து விட்டான். நாட்டின் நல்லவர்கள், நியாய புத்தியுடன் ஒழுகுபவர்கள், ஒரு பெரு வழிகாட்டியைத் திரு. மயில்வாகனம் அவர்களின் மறைவிலே இழந்து விட்டார்கள். மட்டக்களப்பின் விவசாயிகளும், ஐக்கிய சங்க-சமூகச் சீர் திருத்த முயற்சிகளில் ஈடுபட்டோரும், தங்கள் கௌரவ காப்பாளனை இழந்து விட்டார்கள். மட்டுநகர், கல்முனை நீதி மன்றங்கள்.

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி"

எனத் தமிழ்த் தலைமகன் வள்ளுவன் வகுத்த நடுவு நிலைமைக் கொள்கைக்கு முரண்படாத வகையிற் சட்டங்களுக்கு விளக்கங் கொடுத்த சட்ட மேதையின் பணியை இழந்து ஏங்கி நிற்கின்றன. சீரிய சமூக சமய ஸ்தாபனங்களும் முற்போக்கு இயக்கங்களும் தங்கள் புரவலனைப் பறி கொடுத்து விட்டன.

ஆனால் ஒன்று: அந்தப் பெரு மனிதன் விரித்து வைத்துச் சென்ற நீதிநூலின் ஏடுகள் இதோ நம் கண் முன் விளங்குகின்றன; வாசித்துப் பாருங்கள். விடா முயற்சி, எவர்க்கும் தீங்கு நினைக்காத சீரிய நோக்கு, 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற அடிப்படையில் தமது அறிவு அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் விசாலமான இதயம், 'எளிய வாழ்வு — உயரிய கொள்கைகள்' என்பவைதாமே, அவர், நமக்காக அந்நூலிலிருந்து படித்துப் படித்துச் சொன்ன பாடங்கள். அப்பண்புகளின் சீரிய விளக்கமாக மிளிர்ந்த அமரர் மயில்வாகனம் அவர்களுக்கு நாம் செய்யக்கூடிய மிகச் சிறந்த கைம்மாறு அப்பண்புக் கதிர்களை நம் வாழ்விலும் பாய்ச்சி ஒளி பெற்று, அவ்வொளியின் துணை கொண்டு 'சீவசேவை' செய்வதேயாகும். அவர் நம்மிடம் அளித்துச் சென்ற அகல்விளக்கின் ஒளி அணையாது பார்த்துக் கொள்வோமாக.

"வெள்ளத் தனைய மலர்நீட்டம், மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு"